

விருதுநகரில் நடைபெற்ற தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி தென்மண்டல கூட்டத்தில், அணியின் செயலாளரும், நாடாளுமன்றக் குழு துணைத்தலைவருமான தயாநிதி மாறனுக்கு நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. மேடையில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம்தென்னரசு மற்றும் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

முப்பெரும் விழா நடத்தி

# வள்ளலாருக்குப் புகழ் சேர்த்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## வடலூரில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

வடலூர், அக்.6

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (05.10.2024) கடலூர் மாவட்டம், வடலூர், திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையத்தில் நடைபெற்ற திருஅருட்பிரகாச வள்ளலாரின் 202ஆம் வருவிக்க உற்றநாள் விழாவில் கலந்து கொண்டு, சன்மார்க்க கொடியினை ஏற்றி வைத்து, வள்ளலார் குறித்த நூலினை வெளியிட்டு, அன்னதானத்தை தொடங்கி வைத்தனர்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

"வடலூர் திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் நடைபெறும் வள்ளலாரின் 202ஆம் வருவிக்க உற்ற நாள் விழாவிற்கு வருகை தந்து, அவரை வணங்கி சன்மார்க்க கொடியினை ஏற்றி வைத்து, அன்னதானத்தை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தொடங்கி வைத்தார்.

திருஅருட்பிரகாச வள்ளலாரின் புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் தான் பல்வேறு நற்செயல்கள் நடைபெற்றுள்ளன என்பதனை யாரும் மறந்திருக்க முடியாது. சென்னையில் வள்ளலார் அவர்கள் வாழ்ந்த பகுதிக்கு வள்ளலார் நகர் என்று பெயர் சூட்டியதோடு, அந்த பகுதியிலுள்ள பேருந்து நிலையத்திற்கும் அவர் பெயரை சூட்டி பெருமை சேர்த்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

இந்த ஆட்சி ஏற்பட்டவுடன், தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி, வடலூரில் வள்ளலார் சர்வதேச மையத்தை ஏற்படுத்துவேன் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின் படி ரூ.99.90 கோடி மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்ட நிலையில், இடையில் ஏற்பட்ட சிறு தடைகளால் பணிகள் தொடர்ந்து நடைபெறாமல் இருந்த சூழ்நிலையில் தற்போது அந்த பணிகள் மீண்டும் தொடங்கப்படும் நல்ல சூழ்நிலை வந்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திருஅருட்பிரகாச வள்ளலார் பிறந்த அக்டோபர் 5-ஆம் நாள் இனி ஆண்டுதோறும் "தனிப்பெருங்கருணை நாள்" என கடைபிடிக்கப்படும் என அறிவித்தார்கள். மேலும், வள்ளலார் அவர்கள் தருமசாலை துவக்கிய 156வது ஆண்டு தொடக்கம், வள்ளல் பெருமான் இவ்வுலகிற்கு வருவிக்க உற்ற 200வது ஆண்டு தொடக்கம், ஜோதி தரிசனம் காட்டுவித்த 152 வது ஆண்டு என மூன்று நிகழ்வுகளையும் இணைத்து அவரது 200வது அவதார ஆண்டான அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை 52 வாரங்களுக்கு முக்கிய நகரங்களில் முப்பெரும் விழாவை கொண்டாடிட உத்தரவிட்டதோடு, அதற்கென டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்கள் தலைமையில் 14 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புக்குழுவை யும் அமைத்தார்.

வள்ளலார் முப்பெரும் விழாவின் முதல் நிகழ்ச்சி யாக, 2022-ஆம் ஆண்டு சென்னை ராஜா அண்ணாமலைபுத்தில் நடைபெற்ற விழாவில் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, "வள்ளலார் - 200" இலச்சினை, தபால் உறை மற்றும் சிறப்பு மலர் ஆகியவற்றை வெளியிட்டு, ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்வையும் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு இலக்கியப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டதோடு, தொடர் அன்னதானமும் வழங்கப்பட்டது. இப்பணிகளுக்காக முதலமைச்சர் அவர்கள் ரூ.3.25 கோடியை அரசு நிதியாக வழங்கினார்.

அதேபோல 2023-ஆம் ஆண்டு அக்டோபர் 5 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற ஓராண்டு தொடர் நிகழ்வின் நிறைவு விழாவில் முதலமைச்சர் அவர்கள் வள்ளலார் சர்வதேச மையம் கட்டுவதற்கான அரசாணையை வழங்கியதோடு, வள்ளலார் குறித்த புகைப்பட கண்காட்சி மற்றும் அன்னதானத்தை தொடங்கி வைத்து, முப்பெரும் விழாவினை சிறப்பாக நடத்திட்ட சிறப்புக் குழுவினரை பாராட்டி சிறப்பித்தார்கள்.

இப்படி தொடர்ந்து வள்ளலாரின் புகழுக்கு புகழ் சேர்க்கின்ற அரசாக, வாழும் வள்ளலாராக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றுகின்ற பணியில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். வள்ளலாருக்கு பெருமை சேர்க்கும் இத்தகைய பணிகளுக்கு உறுதுணையாக இருக்கின்ற மாவட்ட அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கு துறையின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.விஷ்ணுபிரசாத், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்ய செந்தில்குமார், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா. இராஜாராம், இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் ஜெ. பரணிதரன், உதவி ஆணையர் ஆர். சந்திரன், அறங்காவலர் குழுத் தலைவர் க, அழகானந்தம் மற்றும் அறங்காவலர்கள், நிர்வாக அலுவலர் ஜெ. ராஜா சரவண குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆலந்தூர் வடக்குப் பகுதியில்

# இல்லம் தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை படிவம்!

## பகுதிச் செயலாளர் ப.குணாளன் வேண்டுகோள்!

சென்னை, அக்.6

ஆலந்தூர் வடக்குப் பகுதிக்கு உட்பட்ட வட்ட கழகச் செயலாளர்களுக்கு பகுதி கழகச் செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

ஆலந்தூர் வடக்கு பகுதிகளில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல் வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கேற்ப காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் குறு,சிறு நடுத்தர தொழில் நிறுவனம் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கும் நிகழ்வு நடைபெற்றது.

அதில் சேர்க்கப்பட்ட இளைஞர் அணி உறுப்பினர் படிவங்களை அந்தந்த வட்ட கழக செயலாளர்கள் இன்று மாலை 5 மணிக்குள் ஆலந்தூர் சட்டமன்ற அலுவலகத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மற்றும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கைக்கான பொறுப்பாளர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் வினோத் குமார் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு ஆலந்தூர் வடக்குப் பகுதி தி.மு.க. செயலாளர் ப.குணாளன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

## வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலை! கே.திராவிட பக்தன் தலைமை!

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட கழகச் செயலாளர் – திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. அறிக்கை!



திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் நாளை 07-10-2024 திங்கள் கிழமை பகல் 3.00 மணியளவில் திருவள்ளூர் ஆயில் மில் அருகில் உள்ள ஐ.வி.ஆர். திருமணம் மண்டபத்தில் மாவட்டத் அவைத் தலைவர் கே. திராவிடபக்தன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன். திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி. ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை ஆற்றுகிறார் அதுசமயம் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணிஎம். பூபதி கழக விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி. இ. ஆதிசேஷன். கழக நெசவாளர் அணி துணைதலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர். இ. குருதாஸ். மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர் வி.சி.ஆர். குமரன். பா.உதயமலர்பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன்சக்ரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம் வி.கிஷோர். மு.சுப்பிரமணியம் பி. ராஜேஸ்வரிரவீந்திரநாத் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். இக்கூட்டத்தில் முன்னதாக திருவள்ளூர் நகர செயலாளர் சி. சு.ரவிச்சந்திரன் வரவேற்புரை ஆற்றுகிறார். மேற்கண்ட கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ள ஆய்வுக் கூட்டத்திற்கு வருகை தரவுள்ள மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து

**திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மண்டலம்:15 வார்டு எண்:193 ஒக்கியம் துரைப்பாக்கத்தில் உள்ளடக்கிய சாய் நகர் பகுதியில் பூங்காவை மேம்படுத்த பணிக்கு 1.35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார். உடன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம்.கே.ஏழுமலை, வட்டக் கழக செயலாளர் ஏ.கே.ஆனந்தன், மாவட்ட பிரதிநிதி தேவராஜ், அணிகளின் துணை அமைப்பாளர் எம்.ஆர்.எல்.விஜயகுமார் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள், பொதுநல சங்க நிர்வாகிகள் ,அனைவரும் உடன் இருந்தனர்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில்

# முதலமைச்சர் கோப்பை - 2024 விளையாட்டுப் போட்டிகள்!

## சிவகங்கையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சிவகங்கை, அக்.6-

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடத்தப்படும் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை - 2024 மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 10.09.2024 சிவகங்கை மாவட்ட விளையாட்டு அரங்கில் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைப் போட்டியில் மாவட்ட அளவில் 11, 56,566 நபர்கள், இணையதள முன்பதிவு செய்து (பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுப் பிரிவினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள்). 36 வகையான விளையாட்டு போட்டிகளை, 168 பிரிவுகளில் (total events) மாவட்ட, மண்டல அளவில் நடத்தப்பட்டது.

அக்டோபர் 4ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை சென்னை, கோயம்பத்தூர், திருச்சி, மதுரை மற்றும் செங்கல்பட்டு ஆகிய நகரங்களில், மாவட்ட மற்றும் மண்டல அளவில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 33,000 நபர்கள் பங்கு பெறும் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை - 2024 போட்டிகளை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 04.10.2024 சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் தொடங்கி வைத்தார்.

நேற்று 05.10.2024 நடைபெற்ற போட்டிகள் விபரங்கள் :

**ஹாக்கி போட்டி (பள்ளி மாணவிகள்) :**

நேற்று எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் நடைப்பெற்ற பள்ளி மாணவிகளுக்கான ஹாக்கி போட்டியில், திருப்பூர், திருச்சி, திருவாரூர், தர்மபுரி, அரியலூர், கோயம்பத்தூர், ஈரோடு, திருவள்ளூர் மாவட்ட அணிகள் முதல் சுற்றில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்கு தகுதிப் பெற்றுள்ளது.

**கால்பந்து போட்டி(பள்ளி மாணவர்கள்) :**

நேற்று ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கான கால்பந்து போட்டியில் தர்மபுரி, திருப்பூர், காஞ்சிபுரம், சேலம், மதுரை, திருச்சி மாவட்ட அணிகள் முதல் சுற்றில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்கு தகுதிப் பெற்றுள்ளது.

**பேட்மிண்டன் போட்டி(பொது பிரிவினர்) :**

நேற்று மேலக்கோட்டையூர், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைகழகத்தில் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பொது பிரிவில் கவியரசி (தஞ்சாவூர்), கனிஷ்கா (திருச்சி), அனிகா ஜெர்லின் (மதுரை), ஆர்த்தி ரசிகா (சிவகங்கை) முதல் சுற்றில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்கு தகுதிப் பெற்றனர்.

**பேட்மிண்டன் போட்டி(பொது பிரிவினர்) :**

நேற்று மேலக்கோட்டையூர், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைகழகத்தில் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பொது பிரிவில் நடைபெற்ற ஆட்டங்களில் சர்வேஷ் இ (கடலூர்), கே.பிரபு (சேலம்), எஸ்.சாய்பிரசாத் (காஞ்சிபுரம்) ஆகியோர் முதல் சுற்றில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும்

# விடுதியில் பயிலும் கல்லூரி மாணாக்கர்களுக்கு ‘நல்லோசை’ சமூக ஆய்வகங்கள்!

## தரமணியில் அமைச்சர் மா.மதிவேந்தன் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.6-

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், சென்னை, தரமணியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் விடுதியில் பயிலும் கல்லூரி மாணாக்கர்களுக்கு நவீன தொழில் நுட்பங்களை வளர்க்கும் விதமாக "நல்லோசை" சமூக ஆய்வகங்களை தொடங்கி வைத்தார்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் விடுதியில் பயிலும் கல்லூரி மாணாக்கர்களுக்கு கல்வியோடு சேர்ந்து தொழில் வாய்ப்புகளையும், நவீன தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளவும், அவற்றுக்கான தனிப்பயிற்சி மூலம் கல்லூரி படிப்பினை முடித்து வெளியில் செல்லும் போதே வேலை பெறும் திறனை வளர்க்கும் வண்ணம் பயிற்சி வழங்கப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக "நல்லோசை" சமூக ஆய்வகங்களை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அவர்களால் நேற்று (05.10.2024) தொடங்கி வைக்கப்பட்டது.

"நல்லோசை" சமூக ஆய்வகங்களானது அறிவு பூர்வமான சிந்தனைகளை வளர்க்கவும், புதிய வேலை வாய்ப்புகளை பற்றி அறிந்து கொண்டு கல்லூரிக் காலத்திலேயே அதற்கேற்ப மாணாக்கர்களை தயார் செய்து, படிப்பை முடித்து விடுதியில் இருந்து செல்லும் ஒரு மாணவரை கையில் வேலை வாய்ப்புடன் இந்த சமூகத்தில் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டு இன்று தொடங்கி வைக்கப்படுகிறது. எனவே இத்திட்டத்தின் மூலம் மாணாக்கர்கள் தொழிற்திறன் பெற்றவர்களாக மட்டுமின்றி ஒட்டுமொத்த சமூக வளர்ச்சியிலும் பங்கு வகிக்கும் சிறந்த மனிதர்களாகவும் உருவாக்கப்படுவார்கள்.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களின் நலனில் அக்கறை கொண்டு விடுதி மாணாக்கர்களுக்கான உணவுக் கட்டணத்தை ரூ.1100/ இருந்து ரூ.1500/ ஆக உயர்த்தியுள்ளது. மேலும் விடுதி மாணாக்கர் பயன் பெறும் வகையில் "கற்றல் கற்பித்தல் அறைகள்", "நவீன முன்மாதிரி விடுதிகள்", "இணைய வழி நூலகங்கள்" மாணாக்கரை விடுதிக்கு வரவேற்க வரவேற்பு தொகுப்பு (Welcome Kit) ஆகிய நல்ல திட்டங்களை தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. அதில் இந்த "நல்லோசை" மணிமகுடமாக இருக்கும்.

இவ்விழாவில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதி திராவிடர் நல இயக்குநர் த.ஆனந்த், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் செயலாளர் திருமதி. இரா.உமா மகேஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் பொறுப்பேற்றதை பாராட்டி

# சிவகங்கை மாவட்டத்தில் தி.மு.க.வினர் இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்!

சிவகங்கை, அக். 6-

கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்களால் நியமிக்கப்பட்ட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பணி சிறப்பாக அமைந்திடவும், முதல்வருக்கு நன்றி தெரிவித்தும் சிவகங்கை மாவட்டம் முழுவதும் தி.முக. வினர் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் பட்டாசு வெடித்தும் உற்சாகமாக கொண்டாடினார்கள்.

**1.சிவகங்கை**. சிவகங்கை பஸ் நிலையம் முன்பாக நகர் கழக செயலாளர்நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை. ஆனந்த் தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் பட்டாசு வெடித்தும் கொண்டாடினார்கள். இதில் நகரக் கழக நிர்வாகி கள் கலந்து கொண்டார்கள்.

**2.சிவகங்கை** மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர். மு.குமணன் ஏற்பாட்டின் பேரில் தவழும் தாய் மாற்றுத் திறனாளிகள் இல்லத்தில் மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை ஒன்றிய செயலாளர்கள் எம். ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்தி, எஸ்.எம். மதிவாணன், ஒன்றிய கழக நிர்வாகிகள் ராமமூர்த்தி, விவசாய தொழிலாளர். அணி சேவியர், விவசாய அணி ரவி, தகவல் தொழில்நுட்ப அணி அம்பலம், இளைஞரணி தங்கம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுஅணிதுணை. அமைப்பாளர் பிரவீன் குமார், தெற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் அழகு சுந்தரம், மாணவரணி சுந்தர குமார், தாய்மாற்றுத் திறனாளிகள் இல்ல நிர்வாகி கே. டி.புஸ்பராஜ் சரவணன், வடிவேல், அஜித், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

**3.மானாமதுரை**. மானாமதுரை நகர் கழகம் சார்பில் அண்ணா சிலை முன்பாக நகர்கழக செயலாளர் க.பொன்னுச் சாமி தலைமையில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள்.

**4.காளையார்கோவில்**. காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய கழகம் சார்பில் பேருந்து நிலையம் முன்பாக ஒன்றிய செயலாளர் வே.ஆரோக்கியசாமி தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கியும் பட்டாசு வெடித்தும் கொண்டாடப்பட்டது. இதில் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் பங்கேற்றார்கள்.

**5.திருப்புவனம்**. திருப்புவனம் ஒன்றிய பேரூர் கழகத்தின் சார்பில் பேருந்து நிலையம் முன்பாக மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் தலைமையேற்று பொதுமக்களுக்கு இனிப்புகளையும் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மேற்கு ஒன்றிய செயலாளர் திருமதி வசந்தி சேங்கைமாறன், பேரூர் கழகச் செயலாளர் நாகூர் கனி, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ரஹ்மத்துல்லா கான், நிர்வாகிகள் மணிகண்டன், சுப்பையா, மகேந்திரன், டி.ஆர்.சேகர், ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள் தேவதாஸ், அறிவுக்கரசு, இளங்கோ, மீனாட்சி சுந்தரம், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கண்ணன், பத்மாவதி முத்துக்குமார், வேல்பாண்டி, மாரிதாசன் மாணவரணி காதர், மீனவரணி அண்ணாமலை, மணிமுத்து, முருகன் உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



மதுரை மாவட்ட தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி, கோ.தளபதி எம்.எல்.ஏ., மு.மணிமாறன் ஆகியோர் மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் அணி பொறுப்பாளர் முன்னாள் எம்.பி., பவானி ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில், மதுரை வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கே.உமாசிங்கத்தேவன் வரவேற்புரை நிகழ்த்த நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் உறுப்பினர் படிவத்தை பெற்றுக் கொண்டனர். உடன் வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மண்டல தலைவர் வாசுகி சசிகுமார், மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர்கள், மண்டல தலைவர் சரவண புவனேஸ்வரி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள் நூர்ஜகான், பிரமிளா மற்றும் திரளான மகளிர் அணியினர், தொண்டர் அணியினர், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.